1972) and the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1972 (L. A. Bill No. 51 of 1972) as passed by the Assembly, and signed by him for the recommendation of the Council and certifying that the Bills are Money Bills within the meaning of Article 199 of the Constitution of India.

(3) உடுக்குறியிட்ட வினுக்களுக்கு உடுக்குறியிடப்படாத வினுக்களாக விடை.

MR. CHAIRMAN : I have to announce to the House that answers to sixteen starred questions, which have been received from the Government, are laid on the Table of the House today as unstarred questions Nos. 27 to 42.

3. கவன ஈர்ப்பு

(1) தமிழாசிரியர்களிடையே இரண்டு வேறு நிலைகள் உள்ளதை நீக்குவதில் தாமதம் குறித்து

MR. CHAIRMAN : On behalf of the hon. Member Thiru V. Isvarmurti, Thiru L.Balaraman will call the attention of the Minister.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழாசிரியர்கள் இடையே இரண்டு வேறு நிலைகள் உள்ளதை நீக்க வேண்டும் என்று கோரி இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் ஏறத்தாழ 10,000 பேர் விடுத்திருந்த கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிப்பதில் அரசு காட்டி வரும் தாமதம் காரணமாக அந்த ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து.

[மாற்றுத் தலைவர் திரு. எம். ராஜா அய்யர் தலைமை].

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழாசிரியர்கள் தற்போது முதல் நிலை, இரண்டாம் நிலை என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். முதல் நிலை தமிழாசிரியர்கள் பி.டி. ஆசிரியர்களின் ஊதிய விகிதத்தையும், இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் செகண்டரி கிரேட் ஆசிரியர்களின் ஊதிய விகிதத்தையும் பெறுகிருர்கள். இரண்டாம் நிலை தமிழாசிரியர்களுக்கு புலவர் பட்டமும், 5 மாத ஆசிரியர் பயிற்சியும் கல்வித் தகுதிகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. புலவர் பட்டம் நான்கு ஆண்டுகள் படிப்பிற்குப் பின் அடையலாம். இப்படிப்பிற்குச் செல்லுமுன் பொதுக் கல்வித் தகுதி ஒன்றும் பெறத் தேவையில்லை. முதல் நிலை தமிழாசிரியர் பதவிக்கு பொதுக் கல்வித் தகுதியாக பள்ளி இறுதிப் படிப்புத் தேர்ச்சிகளில் தேர்வு பெற்றும் புலவர் பட்டம் அல்லது தமிழ் மொழியில் பல்கலைக் கழகப்